உ

கடவுள் துணை.

சதுரகிரி

அறப்பளீசுரசதகம்.

அம்பலவாணக்கவிராயர்

அருளிச்செய்தது.

இஃது,

திருமயிலை,

வைதிலிங்கதேசிகரால்

பார்வையிடப்பட்டு,

பையர்நத்தம்

லிங்கப்பசெட்டியார்

அவர்களால்.

தஞ்சாவூர்.

சின்னகன்னையசெட்டியார்

அண்டுசன் அவர்களது

சென்னை,

சகலகலாநிலைய அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1892.

விளம்பரம்.

இதனால் சகலமான புண்ணியவான்களுக்கும் தெரிவித்துக் கொள்வது யாதெனில், இப்புத்தகம், இன்னும் பலவித தமிழ், தெலுங்கு, கிரந்தபுத்தகங்களும் சென்னை அனுமந்தராயன்கோவில் தெருவுகீழண்டை வாடை 4-நெம்பர்வீட்டில் தஞ்சாவூர், சின்னகன்னைய செட்டியார் அண்டுசன் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சகலகலாநிலய அச்சுக்கூடத்தில் விற்பனை செய்துகொண்டு வருவதால் வேண்டுபவர்கள் இதனடியில் கையொப்பமிட்டிருக்கிறவருக்கு கடிதம் எழுதி, தருவித்துக் கொள்ளலாம். பதிலுத்திரவுவேண்டியவர்கள் அரை அணா லேபில் அனுப்பினால் மாத்திரம் பதில் தெரிந்துகொள்ளலாம்.

இப்படிக்கு,

பி - லிங்கப்பசெட்டியார்.

4-நெம்பர்-அனுமந்தராயன்கோவில் தெருவு

சென்னப்பட்டணம்.

உ

சிவமயம்.

அறப்பளீசுரசதகம்.

காப்பு.

வெண்பா.

உம்பர்கோனெம்பெருமா னேங்கறப்பளீசுரன்மேற்
பைம்பொருள்சேருஞ்சதகம்பாடவே-யம்புவியோர்
ஆக்குந்துதிக்கையுளா னன்புடையார்க்கின்பருளிக்
காக்குந்துதிக்கையுளான் காப்பு.

உயிர்ச்சிறப்பு.

கடலுலகில்வாழு முயிரெழுபிறப்பினுண் மிக்ககாட்சிபெறு நரசன்மமாய், கருதப்பிறத்தலரிததினு முயர்சாதியிற்கற்புவழிவருதலரிது,வடிவமுடனவயவங்குறையாதுபிழையாதுவருதலது தனினுமரிது, வந்தாலுமிதுபுண்ணியமிது பாவமென்றெண்ணி மாசில்வழிநிற்றலரிது, நெடியதனவானாதலரிதினிரக்கமுள நெஞ்சினோனாதலரிது, நேசமுடனுன்பதத் தன்பனாய்வருதலிந்நீணிலத்ததினுமரிதாம், அடியவர்க்கமுதமேமோழைபூபதிபெற்றவதிபனெமதருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. க

மனையாட்டிசிறப்பு.

கணவனுக்கினியளாய் மிர்துபாஷியாய்மிக்க கமலினிகரூபவதியாய், காய்ச்சினமிலாளுமாய்நோய்பழியிலாததோர்கால்வழியில்வந்தவளுமாய், மணமிக்கநாணமடமச்சம்பயிர்ப்பென்ன வரும்ணியமார்க்கவதியாய், மாமிமாமற்கிதஞ்செய்பவளுமாயவாசல் வருவிருந்தோம்புபவளாய், இனையின்மகிழ்நன்சொல்வழி நிற்பவளுமாய்வந்தியென் பெயரிலாதவளுமாய், இரதியெனவே லீலைபுரிபவளுமாய்ப் பிறர்தமில்வழிசெலாதவளுமாய், அணியிழையொருத்தியுண்டாயினவள் கற்புடையளாகு மெமதருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. உ

நன்மக்கட்பேறு.

தன்குலம்விளங்கிடப் பெரியோர்கள் செய்துவரு தருமங்கள்செய்துவரலும், தன்மைமிகுதானங்கள்செய்தலுங்கனயோகசாதகனெனப்படுதலும், மங்குதலிலாததன் றந்தைதாய்குருமொழிமறுது வழிபாடுசெயலும், வழிவழிவருந்தமது தேவதாபத்திபுரிமார்க்கமுந் தீர்க்காயுளும், இங்கிதகுணங்களும் வித்தையும்புத்தியு மீகையுஞ்சன்மார்க்கமும், இவையெலாமுடையவன்புதல்வனுமவனையே யின்றவன்புண

ணிபவாறும், அங்கசவிரோதியேசோதியே நீதிசேராசனெமதருமை மதவேள், அநுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௩

சகோதரரொருமை.

கூடப்பிறந்தவர்க்கெய்துதுயர்தமதுதுயர்கொள்சுகந்தஞ்சுகமெனக், கொண்டிதாங்தேடு பொருளவர்தேடுபொருளவர்கொள்கோதில் புகழ்தம்புகழெனத்தேடுற்றவர் பிதாதந்தவர் நிதிலவர்தவமாமெனச், சிவனென்றுடல்வேறி வர்க்கென்னவந்தலேச் சிறரவமணிவாய்தொறும், கூடிற்றவிரைவைபெடுத்தோருடனிறைத்திடுங் கொள்கைபோற்பிறவின்றியே, கூடிவாழ்பவர்தம்மையே சகோதரரணக்கூறுவதுவேதருமமாம், ஆடிச்சிவந்தசெந்தாமரைப்பாதனே யண்ணலெமதருமைமதவேள, அநுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௪

சற்குருவியல்பு.

வேதாந்தசித்தாந்த வழிதெரிந்தசாரவிவரமெய்ஞ் ஞானபூரண, வித்யாவிசேஷசற்குணசத்யசம்பன்ன விரவைராக்கியமுச்ய, சாதாரணப்பிரியயோக மார்க்காதிக்யசமாதிநிஷ்டானுபவராய்ச், சட்சமயநிலைமையும் பரமந்த்ரபாதந்த்ரருமமும்பரசமயமும், நீதியினுணர்ந்துதத்துவமார்க்கராய்ப் பிரபஞ்சகண்டபாசமிலராய், நித்தியானந்தசை தன்னியபராபரசையனுபெரியுளோர் சற்குருவதாம், ஆதாரமாயுயிர்க்குயிராகியெவையுமாம்மம்மனெமதருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௫

நன்மாணாக்கரியல்பு.

வைதாலுமோர்கொடுமை செய்தாலுமோசிறிமாறுநிகழ்ந்தாலுமோ, மனதுசற்றுங்கோணுதாணுமாதாபிதாவெனக்குப், பொய்யாமனீயென்றுகனிவோடிம்பணிவிடைபுரிந்துபொருடலாவியும், புனிதவுன்றனதெனத்தத்தஞ்செய்திரவுபகல் போற்றிமலரடியில் வீழ்ந்து மெய்யாகவேபரவியுபதேசமதுபெற விரும்புவோர்நற்சீடராம், வினைவேரறும்படியவர்க்கருள் செய்திடவேதே மிக்கதேசிகராகுடன், ஐயா புரம்பொடிபடச்செய்த செம்மலேயண்ணலெமதருமைமதவேள், அநுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௬

பொருள்செயல்வகை.

புண்ணியவசத்தினாற்செல்வமதுவரவேண்டும் பொருளைரட்சிக்கவேண்டும், புத்தியுடனதுவொன்று நூறாகவேசெய்துபோதவும் வளர்க்கவேண்டும், உண்ணவேண்டும்பின்பு நல்லவஸ்திராபரண முடலிற்றரிக்கவேண்டும், உற்றபெரியோர்கவிஞர் தமராதுளர்க்கு கவியோங்கு புகழ்தேடவேண்டும், மண்ணில்வெகுதருமங்கள்செயவேண்டுமுயர் மோக்ஷவழிதேடவேண்டுமன்றி, வழிதிற்புதைத்துவைத்தியாதபேர்களை மார்க்கமறியாக்குருடராம், அண்ணலேகங்கா குலத்தலைவன் மொழிதருமழகினெம தருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௭

தீவழிவிலக்கு.

வஞ்சகர்தமைக்கூடிமருவொணாதன்பிலார் வாசலிற்செலலொணாது, வாதவரிடத்திலும்புரியொணாதறிவிலாமடையருடனிற்கொணாது, கொஞ்சமேனுந்தீது செய்யொணாதொருவர்மேற் குற்றமென் றெண்ணொணாது, கோதையர்களோடுபரிகாசஞ்செய்யொணாது சோருரைகள்பேசொணாது, நஞ்சுதருமாவொடும்பழகொணாதிருள்வழிநடந்து தனியேகொணாது, நதிபெருக்காகினதி னீஞ்சல்செய்யொணாது நல்வழிமறககொணாது, அஞ்சாமலரசர்முன் பேசொணாதிவையெலாமறியுமெமதருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௮

ஒன்றற்கொன்றழகுசெய்வன.

வாழ்மனை தனக்கழகுகுலமங்கைகுலமங்கைவாழ்வினுக்கழகுசிறுவர், வளர்சிறுவருக்கழகு கல்விகல்விக்கழகு மாநிலந்துதிசெய் குணமாம், சூழ்குணமதற்கழகு பேரறிவுபேரறிவு தோன்றிடிலதற்கழகுதான், தூயதவமேன்மையுப காரவிரதம்பொறுமை சொல்லரியபெரியோர்களைத், தாழ்தல்பணிவிடைபுரிதல் சீலநேசங்கருணைசாற்றுமி வையாமென்பர்காண், சௌரிமலரோனமரர்முனிவர்பூச்சுடரெலாஞ் சரணமெனரட்சியெனவே, ஆழ்கடலுதித்துவரு விடமுண்டகண்டனேயண்ணலேயருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௯

ஒன்றிலாமையாற்பயன்படாதவை.

கோவிலில்லாதவூர் நாசியில்லாமுகம் கொழுநனில்லாதமடவார், குணமதில்லாவித்தை மணமதில்லாதமலர் குஞ்சரமிலாதசேனை, காவலில்லாதபயிர்பாலரில்லாதமனை கதிர்மதியிலாதவானம், கவிஞரில்லாதசபை சுதிலயமிலாதபண் காவலில்லாததேசம், ஈவதில்லாததனமிய மில்லாதசெப மிசைலவணமில்லாதவூண், இச்சையில்லாதபெண் போகமிவைதம்மினேதுபலனுண்டுகண்டாய், ஆவியனையாட்கிடந் தந்தனாகற்பதருவாகுமெமதருமைமதவேள் அநுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௰

ஒன்றற்கொன்றுதகாதசேர்க்கை.

பூததயையில்லாத லோபியிடத்திலே பொருளையருளிச், செய்தனை புண்ணியஞ்செயகின்ற சற்சனரிடத்திலே பொல்லாதமிடிவைத்தனை, நீதியகன்மூடர்க்கருந்ததியெனத்தக்க நெறிமாதரைத்தந்தனை, ஞானமுளவுத்தமர்க்கிங்கிதமிலாதகொடுநீலியைச்சேர்வித்தனை, சாதியிலுயர்ந்த பேரீனர்பின்னேசென்று தாழ்ந்துபாவச்செய்தனை, தமிழருமையறியாத புல்லர்மேற்கவிவாணர் தாம்பாடவேசெய்தனை, ஆதரவிலாமலிப்படிசெய்த தென்சொலாயமலவெமதருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௧௧

குணக்கேடரியல்பு.

மாறுகலைகற்றுநிலைபெற்றசபையிலே வாயிலாதவ ரொருபதர், வாள்பிடித்தேதிரிவரினோடிப் பதுங்கிடுமனக்கோழைதானொருபதர்,

ஏருவழக்குரைத் தனைவருஞ்சிசீயென் றிகழநிற்பானொருபதர், இல்லாள் புறஞ்செலச் சம்மதித்தவளோடிணங்கி வாழ்பவனொருபதர், வேறொருவர்மெச்சாது தன்னையே தான்மெச்சி வீண்பேசுவானொருபதர், வேசையர்களாசைகொண்டுள்ளளவுமனையாளை விட்டுவிடுவானொருபதர், ஆறுதந்தயரையுமிடியையுந் தீரத்தருள்செயமலவெமதருமைமதவேள் அநுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே.

செயத்தக்கவை,

வாலிபந்தனில்வித்தை கற்கவேண்டுங்கற்றவழியிலேநிற்கவேண்டும், வளைகடறிருந்துபொரு டேடவேண்டுந் தேடிவளரறஞ்செய்யவேண்டும், சீலமுடையோர்களைச் சேரவேண்டும்பிரிதல்செய்யாதிருக்கவேண்டும், செந்தமிழ்ப்பாடல்பலகொள்ளவேண்டுங்கொண்டதியாகங்கொடுக்கவேண்டும், ஞாலமிசைபலதரும நாட்டவேண்டுந் நாட்டிநன்றாய்நடத்தவேண்டும், நம்பனிணையடிபூசை பண்ணவேண்டும்பண்ணினாலுமிகு பத்திவேண்டும், ஆலமர்க்கண்டனே பூதியணிமுண்டனே யனகவெமதருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௰௩

மேன்மேலுயர்ச்சி.

தன்மட்டிலிறவாது சீவனஞ்செய்பவன் சாமார்த்தியமுளபுருஷனும், சந்ததம்பதின்மரைக்காப்பாற்றுவோன் மிக்கதரணிபுகழ்தருதேவனும், பொன்மட்டிலாமலிந் தொருநூறுபேரைப்புரப்பவன்பொருவிலிந்திரன், புவிமீதிலாயிரம்பேர்தமைக்காப்பாற்று புண்ணியவானேபிரமனும், நன்மைதருபதினாயிரம்பேர்தமைக்காத்துரட்சிப்பவன் செங்கண்மால், நாளுமவன்மேலதிகமாகவெகுபேர்க்குதவுநரனேமகாதேவனும், அன்மட்டுவார்குழலி பாகனேயேகனேயண்ணலெமதருமைமதவேள் அநுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௰௪

செயற்கருஞ்செயல்.

நீர்மேனடக்கலா மெட்டியுந்தின்னலா நெருப்பைநீர்போற்செய்யலாம், நெடியபெருவேங்கையைக்கட்டியேதழுவலா நீளரவினைப்பூணலாம், பார்மீதுமணலைச்சமைக்கலாஞ்சோறெனப்பட்சமுடனேயுண்ணலாம், பாணமொடுகுண்டுவிலகச்செய்யலா மரப்பாவைபேசப்பண்ணலாம், ஏர்மேவுகாடியுங்கடையுற்றவெண்ணெயுமெடுக்கலாம்புத்திசற்றும், இல்லாதமூடர்தம்மனதைத்திருப்பவேயெவருக்குமுடியாதுகாண், ஆர்மேவுகொன்றைபுனைவேணியாய் சுரர்பரவுமமலனேயருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௰௫

உத்தமராவோர்.

செய்நன்றிமரவாதபேர்களுமொருவர்செய்தீமையைமறந்தபேரும், இரவியந்தரவாறு மொருவர்மனையாட்டிமேற்சித்தம்வையாதபேரும், கைகண்டெடுத்தபொருள்கொண்டுபோய் பொருளாளர்கையிற்கொடுத்தபேரும், காசினியிலொருவர்செய் தருமங்கெடாதபடி காத்தருள்செய்கின்றபேரும், பொய்யொன்றுநிதிகோடிவரினும் வழக்கழிவு

புகலாதிருந்தபேரும், பூவிமீது தலைபோகுமென்னினுங்கனவிலும்பொ
ய்யையுரையாதபேரும், ஐயவிங்கியறெலாஞ் சற்புருஷரென்றுலகிலக
மகிழ்வதருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவளரற
ப்பளீசுரதேவனே. கசு

இதுவுமது.

அடைக்கலமெனத்தேடிவருவோர் தமைக்காக்குமவனேமகாபுரு
ஷனும், அஞ்சாமலெதுவரினுமெதுபோகினுஞ் சித்தமசைவிலான்மகா
தீரனும், தொடுத்தொன்றுசொன்னசொற்றப் பாதுசெய்கின்றதோன்
றலே மகாராஜனும், தூறிக்கலைக்கின்றபேர்வார்த்தை கேளாததுரை
யேமகாமேருவாம், அடுக்கின்றபேருதகுவருமிடர்திர்த்துரட்சிக்குமவ
னே மகாதியாகியாம், அவரவர்தராதரமறிந்து மறியாதைசெயுமவனே
மகாவுசிதனும், அடர்கின்றமுத்தலைச்சூலனே லோலனே யமலனேய
ருமைமதவேள், அநுதினமு மனதினினைதருசதுரகிரிவள றரப்பளீசு
ரதேவனே. கஎ

ஒன்றிலொன் றில்லாமை.

காமிக்குமுறையில்லைவேசைக்குநாணமில்லை கயவர்க்கு மேன்மை
யில்லை, கன்னமிடுகள்வருக்கிருளில்லைவிபசாரகன்னியர்க்காணையில்லை,
தாமெனும்யக்கருத்தோங்குபெரியோர்க்கு வருசாதிகுலமென்பதில்
லை, தாட்சண்ணியமுடையபேர்க கிகலில்லையெங்குமொருசார்பிலார்க்
கிடமதில்லை, பூமிக்குளீயாதலோ பர்க்குவளமானபுகழென்பதொன்று
மில்லை, புலையற்குநிசமில்லை கைப்பொருளிலாததோர் புருஷருக்கொ
ன்றுமில்லை, யாமினிதனக்குநிகர்கந்தரத்திறைவனே யன்புடையவரு
மைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவள றறப்பளீசுர
தேவனே. கஅ

யாக்கைநிலைமைமுதலியவை.

காயமொருமற்புதம்வாழ்வுமலைசூழ்தருங்காட்டிலாதின்பெருக்காம்,
கருணைதருபுதல்வர்களைமனைமனைவியிவையெலாங்கானல்காட்டும், பிர
வாகம்மேயபுசபலவலுமை யிளமையழகிவையெலாம் வெயின்மஞ்சளு
யிர்தானுமே, வெட்டவெளிதனில்வைத்ததீபமெனவேகருதிவீண்பொ
ழுதுபோகாமலே, நேயமுடனேதெளிந்தன்பொடுன்பாதத்தினினைவு
வைத்திருபோதிலும், நீர்கொண்டுமலர்கொண்டுபரிவுகொண்டர்ச்சிக்
கநிமலனேயருள்புரிகுவாய், ஆயுமறிவாளர் பணிபாதனேபோதனே
யண்ணலெமதருமைமதவேள, அநுதினமுமனதினினை தருசதுரகிரி
வள றறப்பளீசுரதேவனே. ககூ

இருமங்கையிருப்பிடம்,

நற்பரிமுகத்திலேமன்னவரிடத்திலேநாகர்ரிகமாமனையிலே, நளி
னமலர்தன்னிலே கூவிளந்தருவிலே நறைகொண்டபைந்துளவிலேக
ற்புடையர்வடிவிலேகடலி லேகொடியிலே கல்லியாணவாயிற்தனிலே,
கடிநகரிடத்திலே நற்சென்னல்விளைவிலேகதிர்பெருவிளக்கதனிலே,
பொற்புடையசங்கி லேமிக்கோர்கள்வாக்கி லேபொய்யாதபேர்பாலி
லே, பூந்தடந்தன்னிலேபாற்குடத்திடையிலே போதகத்தின்சிரசி

௯. அற்பெருங்கோதைமலர்மங்கைவாழிட மென்பரண்ணலெமதரு மைமதவேள் அநுதினமுமன தினினை தருசதுரகிரிவளரறப்பளீசுர தேவனே. ௨௰

மூதேவியிருப்பிடம்.

மித்தமின்றியன்னம் புசிப்போரிடத்திலுமிகுபாவை யோரிடத்து ம்மெய்யொன்றிலாமலே பொய்பேசியேதிரியு மிக்கபாதகரிடத்தும், க திபொன்றுமிலர்போலயலிலங்கொளும் பழையகதைவணிவோரிடத் தும், கடிநாயெனச்சீறி யெவரையுஞ்சேர்க்காத கன்னிவாழ்மனையகத்து ம், தகிசேர்கடத்திலுங் கற்பத்திடையிலுஞ்சார்ந்துவாட்டின் மிரளிலு ம சாம்பிணமுகத்திலுமிவை யெலாங்கலிபுரிதெளவைவாழிடமென் பர்காண் அதிருபமலமங்கைகேசனே மோழைதருவழகனெமதருமை மதவேள், அநுதினமுமன தினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதே வனே ௨௧

குறைகுணமிரண்டினும் பயன்படாதவை.

குணமற்றபேயமுருங் கைத்தழைதழைத்தென்ன குட்டநோய்கொ ண்டிடினென்ன, குலைக்கின்றநாய்மயசுரங்கொண்டென்ன சுரங்வாதுகொசமாய்ப் போகிலென்ன, மணமற்றசெம்முருக் கதுபூத்தலர்ந்தென்னமலராது போகிலென்ன, மதுரமில்லாவுவர்க்கடனீர்கறுத்தென்ன மாவெளுக்கை யாகிலென்ன, உணவற்றபேய்ச்சுரைபடர்ந்தென்னபடராதுலர்ந்துதா ன்போகிலென்ன, வுதவாதபோக்குவெருவாழ்வுவந்தாலென்னவோங் குமிலென்னகாண், அணியுற்றபைங்கொன்றைமாலிகாபரணனேயெ னையாளுமருமைமதவேள், அநுதினமுமனதினினைதருசதுரகிரிவளர றப்பளீசுரதேவனே. ௨௨

குறைவுற்றுங்குணங்கொடாமை.

தறிபட்டசந்தனக் கட்டைபழுதாயினுஞ் சார்மணம் பழுதாகு மோ, தக்கபாலசுவிட்டக்காய்ச்சினும் மதுகொண்டசாரமதுரங்குறையு மோ, நிறைபட்டகதிர்மணி யழுக்கடைந்தாலுமதினின்குண மழுங்கி விடுமோ, நெருப்பிடையுருக்கினுமடிக்கினுந் தங்கத்திலொளிமறையுமாற் றுக்குறையுமோ, கறைபட்டபைம்புயன்மறைந்தாலுமதுகொண்டு கதிர பதிகளம்போகுமோ, கற்றபெரியோர்மகிமையற்பரதிகளினாலுங் காலி னிதுணிர்போகுமோ, அறிவுற்றபேரைவிட்டகலாதவூர்த்திவேலைய னையருமைமதவேள், அநுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்ப ளீசுரதேவனே. ௨௩

இதற்குதவிசெய்வதிதுவெனல்.

வானவர்க்குயிர்க்கண் முச்சுடர்மூவர்கோள்கட்கும் வாழ்வுதரு மூதல்புவனம், வளமிக்கபுவனத்தனக்குமேன்மேலுதவி வாழ்வுபெற் றிடுமன்னராம், தேனமர்நறுந்தொடையல் புனையமன்னவர்க்குதவிசேர் ந்ததுகுடிபடைவர்க்கமாம், சேர்குடிபடைக்குதவி விளைபயிர்பயிர்க்கு தவிசிறப்புற வழங்குமழையாம், மேவியிர்மழைக்குதவிமடவார்தங்கற் பென்றுமந்தர்தந்திரமென்று, வேதியர்ராஜகமொனத் தீம்மூன்

றுமே யென்றுமிக்கபெரியோருரைசெய்வார், ஆனமர்நெடுங் கொடியு
யாத்த வெம்மிறைவனேயதிபனேயருமைமதவேள், அநுதினமுமன
தினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௨௪

இதனைக்கண்டுமகிழ்வதுஇதுவெனல்.

தந்தைதாய்மலர்முகங் கண்டுநின்றுலிப்பதவர்தந்தசந்ததியதா
ம், சந்ரோதயங்கண்டு பூரிப்பதுயர்வாவி தண்குவளைக்குமுதமலராம்,
புந்திமகிழ்வாயிரவிவருதல்கண்டகமகிழ்வ பொங்குதாமரைமலர்களா
ம், போதவும்புயல்கண்டுகண்களித்தேநடம் புரிவதுமயூரவினமாம்,
சிந்தைமகிழ்வாயுதவு தாதாவினைக்கண்டு சீர்பெறுவதிரவலர்குழாம்,
திகழ்நீதிமன்னரைக்கண்டுகளிகூர்வதிச்செகமெலாமென்பர்கண்டாய்,
அந்தியம் வானனையசெஞ்சடாடவியனேயமலனே யருமைமதவேள்
அநுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௨௫

அதுவதுவாகாமை.

உள்ளன்பிலாதபேர்தித்திக்கவேபேசி யுறவாடுமுறவுமுறவோ,
உபசரித்தன்புடன்பரிமாறிடாதசோறுண்ட வர்க்கன்னமாமோ, தள்
ளாதிருந்துகொண் டொருவர்போய்ப்பார்த்து வருதக்கபயிர்பயிராகு
மோ, தளகர்த்தனொருவனில்லாமன் முன்சென்றிடுந்தானையுந்தானை
யாமோ, விள்ளாதபோகமில்லாத பெண்மேல்வருவிருப்பமும் விருப்
பமாமோ, வெகுகடன்பட்டபேர்செய்கின்றசீவனமு மிக்கசீவனமாகு
மோ, அள்ளாதிருங்கருணையாளனே தேவர்தொழுமாதியேயருமை
மதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதே
வனே. ௨௬

நற்குணங்களுக்கிடமாகாதவர்.

வெறிகொண்டமற்கடம் பேய்கொண்டுகள்ளுண்டு வெங்காஞ்சொ
றிப்புதனிலே, வீழ்ந்துதேள் கொட்டிடச்சன்மார்க்கமெள்ளளவுமேவு
மோமேவாதுபோல், குறைகின்றபுத்தியாயதிலற்பசாதியாய்க்கூடவே
யிளமையுண்டாய்க்கொஞ்சமாமதிகாரமுங்கிடைத்தான்மிக்ககுவலயந்த
னிலவர்க்கு நிறைகின்றபுத்தியுஞ்சீலமுமேன்மையு நிதானமும்பெரி
யோர்க்கண்மேல்நேசமும்மீகையும மிவையெலாங்கனவிலுநினைவிலு
வாராதுகண்டாய்அறைகின்றசுருதியின்பொருளானவள்ளலேயண்ண
லேயருமைமதவேள் அநுதினமுமனதினினை தருசதுர கிரிவளரப்பளீ
சுரதேவனே. ௨௭

இதனால்இன்னமுறையனுமெனல்.

தன்னான்முடிக்கவொண்ணாதகாரியம் வந்துதன் முடிப்போன்ற
மையனும், தன்றலைக்கிடர்வந்தபோதுமீட்டுதவுவோன்றாய்தந்தையெ
ன்னலாகும், ஒன்னார்செயுங்கொடுமையான்மெலிவுவந்தபோதுதவுவோ
நிட்டதெய்வம, யுத்திபுத்திகள்சொல்லிமேல்வருங்காரியமுரைப்பவன்
குருவென்னலாம், என்னாளும்வருநன்மைதீமைதனதென்னவே எண்

ணிவருவோன்பந்துவாம், இருதயமரிந்துதன்செற்படிநடக்கும்வனேவனெனிலுமவனேசுதன், அங்காரமும்பணியுமெந்நாளுமேபுனையுமண்ணலேயருமைமதவேள், அநுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. உஅ

அவரவரிடத்துநடக்குமுறை,

மாதாபிதாவினுக்குள்ளன்புடன் கனிவுமாறாதநல்லொழுக்கம், மருவுகுருவானவர்க்கினியவுபசாரமுளவார்த்தைவழிபாடடக்கம், காதார்கருங்கண்மனையாடனக்கேசயனகாலத்திசாநய பாஷணம், கற்றபெரியோர் முதியர்வருமாதுலர்க்கெலாங்கருணை சேரருள்விதானம், நீதிபெறுமன்னவரிடத்ததிக பயவினையநெறியுடையபேர்க்கிங்கிதம், நேயமுளதமர்தமக்ககமகிழ்வுடன்பரிவு நேயரிடத்தில்வயிரம் ஆதிமநுநூல்சொலுவழக்கமிதுவாகுமெமதையனேயருமைமதவேள், அநுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. உகூ

குணத்தைவிற்றுக்குற்றத்தைக்கலர்தல்

துஷ்டவிடக்கவியையாருமே மெச்சுவார்சொல்லு நற்கவியைமெச்சார், துற்சனர்க்ககமகிழ்ந்து பசரிப்பார்வருந்தூயரைத்தள்ளிவிடுவார் இஷ்டமுளதெய்வந்தனைக்கருதிடார்க்கருப்பெண்ணிலோபோய்ப்பணிகுவார், ஈன்றதாயதந்தையைச்சற்றுமதியார்வேசையென்னிலோகாலில்வீழ்வார், நஷ்டலாபங்களுக்குள்ளானபந்துவரினன்றாகவேபேசிடார்நாளுமொப்பாரியாய்வந்தபுத்துறவுக்கு நன்மைபலவேசெய்குவார், அஷ்டதிசைசூழ்புவியிலோங்குகலிமகிமைகாணத்தனே யருமைமதவேள், அநுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௩௰

குணங்காண்குறி.

கற்றோர்களென்பதைச் சிலமுடனே சொலுங்கனவாக்கினாற்காணலாம், கற்புளாரென்பதைப்பார்க்கின்றபார்வையொடுகானடையினுங்காணலாம், அற்றோர்களென்பதனையொன்றிலும்வாராவடக்கத்தினாலறியலாம், அறமுளோரென்பதைப் பூததயையென்னுநிலையதுகண்டுதானறியலாம்வித்தோங்குபயிரைக்கிளைத்துவருதுடியினால்விளையுமென்றேயறியலாம், வீரமுடையோரென்ப தோங்கிவருதைரியவிசேஷத்தினாலறியலாம், அத்தாகுணத்தினாற்குலநலந்தெரியலாமண்ணலேயருமைமதவேள் அநுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே.

கூடிற்பயன்படல்

செத்தைபலகூடியொருகயிறாயினதுகொண்டு திண்கரியையுங்கட்டலாம், திகழ்ந்துபலதுளிகூடியாறாயின்வாரியொடுதிரளேரிநிறைவிக்கலாம், ஒத்தநுணபஞ்சுபலசேர்ந்து நூலாயிடினுடுத்திடும் கலையாக்கலாம், ஓங்கிவருகோலுடன்சிலையுங் கூடினுலுயர்கனிகையாக்கொள்ளலாம், மற்றுமுயர்தண்டுலத்தோடுதவுமிக்கூடின்மல்குமுளைவினை

விக்கலாம், மனமொத்தநேயமொடு கூடியொருவர்க்கொருவர்வாழின் வெகுவெற்றிபெறலாம், அற்றகனியைப்பொருத்தரிபிரமர்தேடரியவமலனேயருமைமதவேள், அநுதின முமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௩௨

அதற்குவெற்றியிடம்.

கலைவலாருக்கதிகசயமதுரவாக்கிலே காமுகர்க்கதிகசயமோ, கைப்பொருளிலேவருமருத்துவர்க்கோசயங்கைவிசேஷந்தன்னிலே, நலமுடையவேசயர்க்கழகிலே யரசர்க்குநாளும்ரணசூரத்திலே, கற்றவர்க்கதிகசய முலகுபுகழ்பொறையிலேஞானவேதியர்த்தமக்கோ, குலமகிமைதன்னிலே வைசியர்க்கோசயங்கூறியதுலாக்கோலிலே, குற்றமில்லாதவேளாளருக்கோசயங்குறயாத கொழுமுனையிலே, அலையில்குதிரைக்குநடைவேகத்திலதிகசெயமாமென்பரருமைமதவேள், அநுதின முமன்தினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௩௩

ஒன்றனில்லாமையாற்பாழ்படல்.

தாம்பூலதாரணமிலாதவதேவருபூர்ணசந்த்ரனிகர்முகசூனியம், சற்சனரிலாததே வெகுசெனச்சேர்ந்துவாழ்தரும்பெரிய நகர்சூனியம், மேம்பாடிலாதமன் னவர்கள்வந்தாள்வதேமிக்க தேசச்சூனியம், மிககசர்புத்திரனில்லாததேநலமானவீறுசேர்கிறகசூனியம், சோம்பாததலைவரில்லாததேவளமுடன்சொல்லுயர்சபாசூனியம், தொல்லுலகிலெவர்க்குமாநிதியமில்லாததேசுத்தசூனியமென்பர்காண், ஆம்பல்வதனத்தனைகுகனையிற்றருளசெய்தவத்தவனேயருமைமதவேள அநுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௩௪

மூடர்தாரதம்மியம்.

பெண்புத்திகேட்கின்றமூடருந்தந்தைதாய்ப்பிழைபுறஞ்சொலுமூடரும், பெரியோர்கள்சபையிலேமுகடேறிவந்ததும்பிதற்றிடும்பெருமூடரும், பண்புற்றசுற்றருஞ்சிறிக்கவேயிழிவானபழிதொழில்செய்திடுமூடரும், பற்றற்றபேர்க்குமுன்பிணைநின்றுபின்புபோய்ப்பரதவித்திடுமூடரும், கண்கெட்டமாடென்னவோடியிரவலர் மீதுகாய்ந்துவிழ்ந்திடுமூடரும், கற்றறிவிலாதமுழுமூடருக் கிவரெலாங்கான்மூடரரைமூடர்காண், அண்கற்றநாவலர்காகவேதூதுபோமையனேயருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௩௫

இதற்கு இதுவேண்டுமெனல்

தனக்குவெகுபுத்தியுண்டாகினும் வேறொருவர்தம்புத்தி கேட்கவேண்டும், தானதிகசூரனேயாகினுங்கூடவேதளசேகரங்கள்வேண்டும், கனமின்றனித்துவாழுகினுந் தன்னினுங்கற்றோரைநத்தவேண்டும், காமினியையொருகுடையிலாண்டாலும்வாசலிற் கருத்துள்ளமந்திரிவேண்டும், தொனிக்கின்றசங்கீதசாமர்த்தியனாகினுஞ் சுதிகூட்ட ஒருவன்வேண்டும், சுடர்விளக்காயினு நன்றாய்விளக்கிடத் தூண்டு

கோளொன்றுவேண்டும், அனற்கண்ணனே படிகசங்கநிகர் வண்ண
னையபனையருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகி
ரிவளரறப்பளீசுரதேவனே. ௫௬

வறுமையின்கொடுமை

மேலானசாதியிலுதித்தாலுமதிலென்ன வெகுவித்தைகற்றுமெ
ன்ன, மிக்கவதிரூபமொடுசற்குணமிருந்தென்னமிகுமானியாகிலென்ன
பாலானமொழியுடையனாயென்ன வாசாரபரனாயிருந்துமென்ன, பார்
மீதுவீரமொடுஞானவானாயென்னபாக்கியமிலாதபோது, வாலாயமாய்
ப்பெற்றதாயுஞ்சலித்திடுவாள்வந்தசுற்றமுமிகழுமே, மரியாதையில்
லாமலேவரும்பேசுவார்மனைவியுந்தூறுசொல்வாள், ஆலாலமுண்டக
ணிவாயனே நேயனேயனகனே னருமைமதவேள், அநுதினமுமனதி
னினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௫௭

ஈனத்துவம்.

இரப்பவன்புவிமீதிலீனனவனுக்கில்லையென்னுமவனவனுலீனன்,
ஈகின்றபேர்தம்மையீயாமலேகலைத்திடுமடனவனிலீனன், உரைக்கின்
றபேச்சிலேபலனுண்டெனக்காட்டி யுதவிடானவனிலீனன், உதவவே
வாக்குரைத்தில்லையென்றேசொலுமுலுத்தவனிலீனன், இரக்கி
ன்றியாசகர்க்காசைவார்த்தைகள்சொல்லிபலகாலலைந்துதிரியப், பண்
ணியேயில்லையென்றிடுகொடியபாவியேபாரிலெல்லோர்க்குமீனன், அர
கிதழ்க்குமுதவாயுமை நேசனேயெளியரமுதமேயருமைமதவேள்,
அநுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௫௮

மறைப்பனவும்வெளிப்படுத்துவனவும்

சென்மித்தவருஷமுமுண்டானவத்தமுந்தீதில்கிறகச்சாரமும்
தின்றவௌடதமுமேலானதேசிகன்செப்பியமகாமந்திரமும்
புன்மையவமானமுந்தானமும்பைம்புனணிபுனைமடவார்கலவியும்
புகழ்மேவுமான்மியமும்வையொன்பதுந் தனதுபுந்திக்குளேவைப்பதே
தன்மமெனதுரைசெய்வரொன்றார்கருத்தையுந்தன்பிணியையும்பசி
யையும், தான்செய்தபாபமுமவையெலாம்வேறொருவர் தஞ்செவியில்
வைப்பதியல்பாம், அன்மருவுகண்டனேமூன்றுலகு மீன்றவுமையன்
பனேயருமைமதவேள் அநுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்
பளீசுரதேவனே. ௫௯

தேவர்கள்காலவளவை.

சதுர்யுகமோரிரண்டாயிரம் பிற்படிற்சது, முகற்கொருதினம
தாம், சாற்றுமித்தினமொன்றிலேயிந்திரபட்டங்கடாமீரேழ்சென்றி
டும், மதியலியுமித்தொகையினையஞ்சுநூறுபோய் மாண்டபோதொரு
சற்பமாம், மாறிவருகற்பமொருகோடி சென்றுநெடியமால்தனக்கோர்
தினமதாம், அதிபாவுமித்தொகையிலொருகோடிநெடியமால் தோன்
றியேபோய்மறைந்தால், கோதையோர்பாகனேநீகத்தலைமுடிதுளக்
கிடுங்காலமென்பார், அதிகமுளபலதேவர்தேவனேதேவர்கட்கரச

னேயருமைமதவேள் அநுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௪௰

தூய்மையிடமும் தூய்மைசெய்வனவும்,

வாம்பரிதனக்கதிக புனிதமுகமதனிலேமறையவர்க்குயர் புனிதமோமலரடியிலேபுனித மொளிகள்கண்ணுடிக்குமாகின் முற்புதனிரல்மேமபடும்பசுவினுக்குபிற்புறத்திலே மிக்குமடமாதருக்கோ, மேனியெல்லாம்புனிதமாகுமாசௌசமொடுமேவுவனிதையர்தமக்கும், தாம்பிரமதற்குமிகுவெள்ளிவெண்கலமயந்தங்கமியந்தமக்கும்தரும்புனிதமவபுளிசுணஞ் சாம்பல்சாருமண்தாதுசரணம், ஆம்புனிதமிவையென்பர் மாமேருவில்லிலேயனகனேயருமைமதவேள அநுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௪௧

அடங்காதவற்றை அடக்குமுபாயம்

கொடியபொலியெருதையிரு மூக்கிலுங்கயி றென்றுகோர்த்துவசவிர்த்திக்கொள்வார்க்குவலயந்தனின்மதக்களிறதனையங்குசங்கொண்டுவசவிர்த்திக்கொளவார் படியில்விஷவரவைமந்திரதந்திரத்தினுற்பற்றிவசவிர்த்திக்கொள்வார் பாயபரியைநெடியகடிவாள மதுகொடுநடை பழக்கிவசவிர்த்திகொள்வார், விடமுடையதுஷ்டரைத்சோர்பந்துகைக்கொண்டுவீசிவசவிர்த்திகொள்வார், மிக்கபெரியோர்களுங்கோபத்தையறிவால்விலக்கிவசவிர்த்திகொள்வார, அடியவர்துதிககவருசெந்தாமரப்பதத்தையனேயருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௪௨

ஒளியினுயர்வு

செழுமணிக்கொளியதன்மட்டிலேயதினுமோகெய்யகச்சோதமெனவேசெப்பிடுங்கிருமிக்குமிச்சமொளியதனினுக் தீபத்தினொளியதிகமாம், பழுதிலாத்தீவட்டிதீபத்தினதிகமாம்பகல்வத்தியதிலதிகமாம், பாரமத்தாப்பினொளியதில்திகமதிலுமோபனிமதிக் கொளியதிகமாம் விழைவுதருபரிதிக்குமனுநீதிமன்னர்க்கும்வீரவிதரணிகருக்கும், மிக்கவொளிதிசைதொறும்போய்விளங்கிடுமென்னவிரகுளோருரைசெய்குவார், அழல்விழிகொடெரிசெய்து மதனவேடனைவென்றவண்ணலேயருமைமதவேள், அநுதினமுமனதினினை ருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௪௩

குணங்குற்றமாதல்.

வான்மதியை நோக்கிடிற்சோரர்காமுகருககு மாறுதவல்விஷமதாம், மகிழ்நன்றனைக் காணிலிதமிலாவிபசரியமாதருக்கோ விஷமதாம், மேன்மைதருநற்சுவைபதார்த்தமுஞ்சுரரோகமக்கபோர்க்கதிக்விஷமாம், வித்தியாஇபர்தமைக்கண்டபோததிலோபவினர்க்கெலாம் விஷமதாம், ஈனமிகுபுன்கவிவலோர்க்கதிகசபைகாணிலேலாதகொடியவிஷமாம் ஏற்றமில்லாதபடுபாவிகடகற மென்னிலென்னுளுமதிகவிஷமாம், ஆனதவயோகியர்களி தயதாமமறையு மண்ணலே யருமைமதவேள்அநுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே.

பிறவிக்குணமாறாமை.

கலங்காதசித்தமுஞ்செல்வமுஞ்ஞானமுங்கல்வியுங்கருணைவிளைவும்
கருதரியவடிவமும்போகமுநதியானமுங்கணநுபமுளமங்கையும்
அலங்காதவீரமும்பொறுமையுந்தந்திரமுமாண்மையுமமுதமொழியும்
ஆனவிச்செயலோடுஞ்சனனவாசனையினாலாகிவருமன்றிலமேல்
நலஞ்சேருமொருவரைப்பார்த்துப்பெறக்கருதினண்ணுமோரஸ்தாளித
நற்சுவைதனக்குவரவேம்புதவுமோநெடிதுநாள்செயினும்வாராதுகா
அலங்காரமாகமலர்க்கொன்றைமாலிகைசூடுமண்ணாமலையருமைமதவே
அநுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௫௩

ஊழ்வலி.

கடவுளவுரைத்திடுவாரிபிரம்மருவமுங்காணும்படிக்குரைசெய்வார்
காசினியினளவுபிரமாணமதுசொல்வார்காயத்தினிலைமையறிவார்
விடலறியசிவனிலைகாட்டுவார்மூச்சையும்விடாமற்றமித்தடக்கி
மேன்மேலும்யோகசாதனைவிளப்பாரெட்டிணைமீதிலுந்தாவுவார்
தொடவரியபிரமநிலைகாட்டுவாரெண்வகைத்தொகையாணசித்தியறி
சூழ்வினைவரும்பொழுதிற்கியுழலவாராதுதடைக்கலுருநான்முகற்
அடைவலவெளத்தெரிந்துளவில்பலநூல்சொல்லுமண்ணாமலையருமை
அநுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௪௫

ஒப்புயர்வில்லனவை.

வேதியர்க்கதிகமாஞ்சாதியுங்கனகமகமேருவுக்கதிகமலையும், வெண்டிரைகொழித்துவருகங்காநதிக்கதிகமேதினியிலோடுநதியும், சோதிதருமாதவர்க்கதிகமாங்காந்தியுஞ்சூழ்கனற்கதிகசுசியும், தூயதாய்தந்தைக்குமேலானதெய்வமுஞ் சுருதிக்குயர்ந்தநூலும், ஆதிவடமொழிதனக்கதிகமாமொழியுநுகரன்னதானத்தினுமேலோர், அதிதானமுமில்லையென்றுபலநூலெலாமாராய்ந்தபெருநரைசெய்வார், ஆதவன்பிரமன் விண்ணவர்முனிவர்பரவவருமண்ணாமலையருமைமதவேள, அநுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௫௫

வீண்செயல்.

வேட்டகஞ்சேர்வோரும் வீணரேவீணுரைவிரும்புவோரவரின், வீணர்விருந்திகண்டில்லா டனக்கஞ்சியோடிமறைகிரகி லோரவரின் வீணர், காட்டந்தருங்கல்வியில்லோரும் வீணரோநாடியவர்மேற்கவி சொல்வார், நானிலந்தனில்வீணரவரினும்வீணரேநரைச்சுமக்குமெளியோர், தேட்டறிவிலாதபொருவீணரேயவரினுஞ் சேரொருவரைத்தமிளறிச்செலவுசெய்வோரதிகவீணராம் வீணனாய்த்திரியுமெளியேனையாட்கொண்டாட்டஞ் செயிம்பதாம்புயமுடியின் மேல்வைத்தவமலனே யருமைமதவேள், அநுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௫௬

உ. தலியின்றிக்கெடுவன.

மூப்பொருவரில்லாதகுமரிகுடிவாழ்க்கையு முதரணிலாதநகரும், மொழியும்வெகுநாயகஞ்சேரிடமும்வருமெதுகைமோனையில்லாத கவியும், காப்பமைவில்லாததோர் நந்தவனமும் நல்லகரையிலா நிறைபேரியும், கசடறக்கற்காதவித்தையும்முபதேசகாரணனிலாததெளிவும், கோப்புளவிநோதமுடையோரருகுபுகழாதகோதையர் செய்கூத்தாட்டமும் குளிர்புனனிரைந்துவருமாற்றோரமதினின்ற கோடுயர்ந்தோங்குதருவும், ஆப்பதில்லாததேரிவையெலாமொன்றுக்குமையனே யருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுர தேவனே. ௫௭

இவையேபோதுமெனல்.

பொய்யாதவாய்மையுஞ் சீலமுஞ்சார்ந்துளோர் பூவலஞ்செயவேண்டுமோ, பொல்லாதகொலைகளவிலாத நன்னெறியுளோர் புகழறஞ்செயவேண்டுமோ, நையாதகாமத்தை லோபத்தைவிட்டபேர் நல்லறஞ்செயவேண்டுமோ, நன்மனோசுத்தியுண்டானபேர்மேலுமொருநதிபடிந்திடவேண்டுமோ, மெய்யானடியரைப்பரவுவோருன்பதம்விரும்பிவழிபடவேண்டுமோ, வேதியர்தமைப்பூசைபண்ணுவோர்வானவரை வேண்டியர்ச்சனைசெய்வரோ, ஐயாறுடன்கமலைசோணசலந்தில்லையதிபனே யருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௫௮

அரியராவோர்.

பதின்மதிலொருத்தர்சபைமெச்சிடப்பேசுவோர்பாடுவோர்நூற்றிலொருவர், பார்மீதிலாயிரத்தொருவர்விதிதப்பாது பாடிப்பிரசங்கமிடுவோர், இதனருமையறிதவோர்பதினாயிரத்தொருவ ரிதையறிந்திதயமகிழ்வோர், ஈகின்றபேர்புவியிலேயருமையாகவே இலட்சத்திலேயொருவராம், துதிபெருகவருமூன்று காலமுமறிந்தமெய்த்தூயர்கோடியிலொருவராம், தொல்லுலகுபுகழ்காசியேகாம்பரங்கைலைசூழுமவனிபேரூர், அதிகமுளவெண்காடுசெங்காடு காளத்தியத்தனே யருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவளர றப்பளீசுரதேவனே. ௫௯

கற்புமேம்பாடு.

தன்கணவனுருவமாய்த் தற்புணரவந்தோன் றனக்கிணங்காதநிறையாள், தழற்கதிரெழாமலும் பொழுதுவிடியாமலுஞ் சாபங்கொடுத்தசெயலாள், மன்னிவளரழன்மூழ்கியுலகறியவேதனதுமகிழ்நனைச்சேர்ந்துபரிவாள், மைந்தனைச்சுடவந்தவிறைவந்தவடிவாணமாலையான கனிவாள், நன்னதிபடிந்திடவதென்ன வாரதன்மூழ்கிநாயகனைமேவுதயவாள், நானிலம்புகழ் சாலிபேர்பெறு நளாயினிநளினமலர்

மேல்வைதேசி, அன்னமெனவருசங்க்ரமதி துரௌபதியென்பாராதி யேயருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௯௰

கோடியுடுக்குநாள்.

கறைபடாதொளிசேருமாதிவாரந்தனிற்கட்டலாம் புதியசீலை, கலைமதிக்காகாதுபலபாலு மழையுனிற் கடிதுநனைவுற்றெருழிதரும், குறைபடாதிடாவரும் வீரியம்போமரிய தருதிவாரந்தனக்கூர், கொஞ்சநாளிற்கிழியும்வெற்றிபோம்புந்தியிற் குருவாரமதிலணிந்தால், மறைபடாதழகுண்டுமேன்மேலு நல்லாடைவருமினிய சுக்ரவாரமே, வாழ்வுண்டுதிருவுண்டுபொல்லாதசனியற்குவாழ்வுபோமரணமுண்டாம், அறைகின்றவேதாகமத்தின்வடிவாய் விளங்கமலனேயருமைமதவேள் அநுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௯௧

சகுனம்.

சொல்லரியகருடன் வானரமரவமுஞ்சூறு ரூசரங்கீரிகலைமான், துய்யபாரத்வாசமட்டையெலி புன்கூகைசொற்பெருகமருவு மாங்குயில், வெல்லரியகரடிகாட்டான் பூனை புலிமேல்விளங்குமிருநாவுடும்பு, மிகவுரைசெயிவையெலாம் வலமிருந்திடமாகில் வெற்றியுண்டதிசநலமாம், ஒல்லையில்வழிப்பயணமாகுமவர் தலைதாக்கலொருதுடை யிருத்தல்பற்றல், ஒருதும்மலாணையிடலிருமல்போகேலென்னலுபசுருதிசொல்லிவையெலாம், அல்லறருநல்லவலவென்பாருதியோர்பரவுமமலனே யருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௯௨

இதுவுமது.

நரிமயில்பசுங்கிள்ளை கோழிகொக்கொடுகாக்கைநாவி செச்சிலி யோந்திதான், நரையான்கடித்தவாய்செம்போத்துடன் மேதிநாடரியசுரபிமறையோர், வரியுழுவைமுயலிவை யினத்தும்வலமாயிடின் வழிப்பயணமாகைநன்றாம், மற்றுமிவையன்றியேகுதிரை யனுமானித்தல்வாய்ச்சொல்வாவென்றிடல், தருவளைதொனித்திடுதல்சோம்புகிடுமுடிமுரசு தப்பட்டையொலிவல்வேட்டுத், தனிமணிமுழக்கெழுதலிவையெலாமூர்வழிதனக்கேகநன்மையென்பார், அருணகிரணோதயத்தருணபானுவை யினையவண்ணலே யருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௯௩

இதுவுமது.

தலைவிரித்தெதிர்வருதலொற்றைப்பிராம்மணன்றவசி சந்நாசிதட்டான், தனிவிலாவெறு மார்பிழுக்கறைபுல்லிறகுதலை தட்டைமுடி மொட்டைத்தலை, கலன்கழிமடந்தையார்சக்கலஞ்செக்கான் எதிர்த் ததிரைதலமிவைகள், காணவெதிர்வரவொண்ணு நீர்க்குடமெருக்கூடை கனிபுலா லுபயம்மறையோர், கலிழ்குசமங்கலைகிழங்கு ரூதகமங்கைநா

ளும் வண்ணனழுக்கு, நசைபெருதுபாற்கலசமணிவளையன் மலரிசைச் சுற்றியெதிர்வரநன்மையாம், அலைகொண்டகங்கைபுனை வேணியாய் பரசணியுமண்ணலே யருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௩௪

உணவில்விலக்கு.

கைவிலைக்குக்கொளும்பாலசப்பால்வருங்காராக் கறந்தவெண்பால், காளான்முருங்கைசுரை கொம்மடிபழஞ்சோறு காந்திக்கரிந்த சோறு, செவ்வையில் சிறுக்கீரைபீர்க்கத்தி வெள்ளுப்புதென்னைவெல்லமலாவகம், சீரிலாவெள்ளுள்ளியீருள்ளியிங்குவொடு சிறபயில்வெணகத்திரிக்காய், எவ்வமில்சிவன்கோயினிர் மாலியங்கிரண மிலகுசுடரில்லாவூண், இவையெலாஞ்சீலமுடையோர்களுக்காகாவெனப்பழையநூலுரைசெயும், ஐவகைப்புலன்வென்ற முநிவர் விண்ணவர்போற்றுமமலனேயருமைமதலேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௩௫

நற்பொருளிற்குற்றம்.

பேரானகங்காநதிக்குமதன்மேல் வருப்பேணமே தோஷமாகும், பொருகிவளர்வெண்மதிக்குள்ளுட்களங்கமே பெரிதானதோஷமாகும், சீராந்தபோதனர்க்கொருவர்மேல்வருகின்ற சீற்றமேதோஷமாகும், திதின்முடிமன்னவர் விசாரித்திடாதொன்று செய்வதவர்மேற்றோஷமாம், தாராளமாமிகத்தந்துளோர் தாராமைதானிரப்போர்தோஷமாம், சாரமுள நற்கருப் பஞ்சாறுகைப்பதவர் தாலஞ்செய்தோஷமாகும், ஆராயுமொருநான் மறைக்குமெட்டாதொளிரு மண்ணலேயருமைமதவேள், அனுதினமு மனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௩௬

மனைகோல்வதற்கு மாதம்.

சித்திரைத்திங்கடனின் மனைகோலமனைபுகச் செல்வமுண்டதினலமே, சேரும்வைகாசிக்கு மேனுளரன்புரந் தீயிட்டதானியாகா வெற்றிகொளிராகவன் றேவிசிறைசேர்கடகம் விறல்லவாவணிசுகம், மேவிடுங்கன்னியிர ணியன்மாண்டதாகாது மேன்மையுண்டைப்பசிக்கே, உத்தமங்கார்த்திகைக் காகாதுமார்கழியி லோங்குபாரதம்வந்தநாள், உயர்வுண்டுமகரத்தின் மாசிமாதத்தில்விட மும்பர்சோனுண்டதாகா, தத்தரீமாரனை யெரித்தபங்குனிதானு மாகுமோ வருமைமதவேள், அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளரறப்பளீசுரதேவனே. ௩௭

விருந்து வாரம்.

செங்கதிர்க்குரவுபோம் பகைவரும் விருந்தொருவர்செய்யொணு துண்ணொணுது, திங்களுக்குறவுண்டு நன்மையாம்பகைவருஞ் செவ்வாய்விருந்தருந்தார், பொங்குபுதனன்மையுண் டுறவாம்விருந்துணப்

பெண்ணவற் கதிகபகையாம், புகாவற்காகிலோ நெடுநாள் விரோத
மாய்ப்போனவுறவுந்திரும்பும், மங்குநிகர்சனிவார நல்லதாமிதனிலு
மனமொத்திருந்தவிடமே, வாலாயமாய்ப்போய் விருந்துணவிருந்து
தவ வாய்த்தநாளென்றறியலாம், அங்கையில்விளங்கிவளர் துங்கபழு
வாலனே யண்ணலே யருமைமதவேள், அநுதினமு மனதினினை தரு
சதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௬௮

பூப்புவாரம்.

அருக்கனுக்கதிரோகி யாவணற்சோமனுக் கானகற்புடையளாவ
ள், அங்காரகற்கும்வகு துக்கியாவாள்புந்தியளவில் பைங்குழவிபெறு
வாள், திருத்தகு வியாழத்தின் மிக்கசம் பத்தினொடுசிறுவரைப்பெற்
றெடுப்பாள், சீருடையபார்க்கவற் கதிபோகவதியுமாந் திருவுமுண்
டாயிருப்பாள், கருத்தழிந்தெழில்குன்றிவறுமைகொண்டலைகுவாள்
காரிவாரத்திலாகில், களபமுலைமடமாதர் புஷ்பவதியாம்வார காலப
லனென்றுரைசெய்வார், அருத்தியுட னெளியேனை யாட்கொண்ட
சோதியேயண்ணலே யருமைமதவேள், அநுதினமு மனதினினை தரு
சதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௬௯

பூப்புலக்கினம்.

வறுமைதப்பாதுவருமேடத்திலிடபத்தின் மாறாது விபசாரியாம்
வாழ்வுண்டு போகமுண்டாகு மிதுனங்கடகம்வலிதினிற்பிறரையணை
வாள், சிறுமைசெயுமிடிசேர்வண்மிருகேந்திரர்க்கேனிற் சீர்பெறுவள்க
ன்னியென்னில், செட்டிடையடுலையெனியிற் பிணியாண்மெலிந்திடுவ
டேளினுக்குத்தனிசெனில், நெறிசிதைவன் பூருவத்தபரநெறியுடைய
ளாகீண மகரமானமில்ளாம், நிறைபோகவதிகும்பமெனின்மீனமென்னி
லோ நெடியபேறிவுடையளாம், அறிவாளர்மடமாதர்த்தமையறியிரா
சிபலனது வென்பரருமைமதவேள்' அநுதினமுமனதினினை தருசது
கிரிவளரறப்பளீசுரதேவனே. ௭௰

தீவுங்கடலும்.

நாவலந்தீவினைச்சூழ்கருங்கடலளவுலட்சம்யோசனையிதனையே,
நாடொறுஞ்சூழ்வதில்வந்திவைதச்சூழ்தனற் கழைச்சாற்றின்கடல்,
மேவுமிதுசூழ்வதிலகுசத்திவைதச்சூழ்தன்மிகுமதுக்கடலினையே,வி
ழைவொடுஞ்சூழ்தல்கிரவுஞ்சதீவும் தனிற்மேற்சூழ்த னெய்கடலதா
ம், பூவிலிதுசூழ்தல்சாகத்தீவுமிங்கிதைப்போர்ப்பது திருப்பாற்கடல்,
போதவதுசூழ்தல்சான்மலிதீவுமாந்தயிர்ப்புணரியப்பாலுமப்பால், ஆ
வலுறுபுட்கரத்தீவாமிதழ்ச்சூழ்வ தரும்புனற்றருமைமதவேள், அநு
தினமுமனதினி தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௭௧

மேலானபொருள்கள்.

சுழிசுத்தமாயிருந்த திலும்படைக்கான துரகமோர்மாணிக்கமாம்
சூழ்புவிகரசனுயதிலைவிவேகமுள துரையுமோர் மாணிக்கமாம் ப

ழூதற்றவதிரூப வதியுமாய்கற்புடைய பாவையோர் மாணிக்கமாம், பலகலைகள்கற் றறியடக்கமுளபாவலன் பார்க்கிலோர்மாணிக்கமாம்ஒழிவற்றசெல்வனுயதிலே தியாகியாயமுசிதனோர்மாணிக்கமாம், உத்தமகுலத்துதித் ததிலுமோமெய்ஞ்ஞான முடையனோர்மாணிக்கமாம், அறிவற்றவேதாக மத்தினவடிவாம்விளங்க மலனேயருமைமதவேள், அனுதினமுமனதினிலே தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௭௨

உண்டியிலையுமுறையும்.

வாழையிலைபுன்னைபுர சுடனற்குருக்கத்தி மாப்பலாத்தெங்குபன்னீர், மாசிலமுதுண்ணலா முண்ணுதவோவரசு வனசஞ்செழும்பாடலாம், தாழையிலையத்தியா லேரண்டபத்திரஞ் சகதேவமுண்முருக்குச், சாருமிவையன்றிவெண் பாலெருக்கிச்சிலிலை தனினுமுண்டிடவொணுதால், தாழ்விலாச்சிற்றுண்டி நீரடிக்கடிபருகல் சாதங்கள்பலவருந்தல், சற்றுண்டன்மெத்தவூ ணித்தனையு மெய்ப்பிணி தனக்கிடமெனப்பருகிடார், ஆழிபுடைசூழுலகில் வேளாளர்குலதிலக னுகுமேமதருமைமதவேள், அனுதினமு மனதினிலே தருசதுர கிரிவள ரறப்பளீசுரதேவனே. ௭௩

கவிஞர்வறுமை.

எழுதப்படிக்கவகை தெரியாதமூடனை யிணையிலாச்சேஷனென்றும், ஈவதில்லாதகன லோபியைச் சபையதனிலிணையிலாக்கர்னனென்றும், அழகற்ற வெகுகோர ரூபத்தையுடையோனை யதிவடிவமாரனென்றும், ஆயுத மெடுக்கவுந் தெரியாதபேடிதனை யாண்மைமிகுவிஜயனென்றும், முழுவதும்பொய்சொல்லி யலைகின்றவஞ்சகனை மொழியரிச்சந்த்ரனென்றும், மூதுலகி லிவ்வணஞ் சொல்லியே கவிராஜர்முறையின்றி யேற்பதென்னே, அழலெனவுதித்தவரு விஷமுண்டகண்டனே யமலே யருமைமதவேள, அனுதினமுமனதினிலே தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௭௪

கவிஞன்.

தெள்ளமிர்த தாரையென மதுரங்கதித்தபைந் தேன்மடைதிறந்ததெனவே, செப்புமுத்தமிழினொடு நாற்கவிதை நாற்பொருடெரிந்துரைசெய் திறமையுடனே, விள்ளரியகாவியத் துட்பொருளலங்காரம் விரியிலக்கண விகற்பம், வேறுமுள தொன்னூல் வழக்குமுலகத்தியல்பு மிக்கப்ரபந்தவகைமை, உளவெல்லாமறிந் தலையடங்குங் கடலை யொத்தநிகசபைகண்டபோ, தோங்கலையொலிக்கின்ற கடல் போற்ப்ரசங்கம துரைப்பவன் கவிஞனாகும், அள்ளிவிஷமுண்டகனிவாயனே நேயனே யமலனே யருமைமதவேள், அனுதினமுமனதினிலே தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௭௫

நற்சார்பு.

காணரியபெரியோர்க டெரிசனம்லபிப்பதே கண்ணிணைகள்செய் புண்ணியம், கருணையாயவர்சொன்மொழி கேட்டிடலபிப்பதிருகாது

செய்திடுபுண்ணியம், பேணியவர்புகழையே துதிசெயவமைத்திடுதல்
பேசில்வாய் செய்புண்ணியம், பிழையாமலவர்தமைத் தொழுதிடலமை
ப்பதுகை செய்திடுபுண்ணியம், வீணிற்செலாமலவர் பணிவி
டைலமைப்பதுன் மேனிசெய்திடுபுண்ணியம், விழைவொடவர் சொற்ப
டி நடந்திடலமைப்பதே மிக்கபூருவபுண்ணியம், ஆணவமெனுங்களை
களைந்தறிவினைத்தந்த வண்ணலே யருமைமதவேள், அநுதினமும
னதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே, ௭௬

பிறந்தநாளோடு வருகிறவாரபலம்.

சென்மநக்ஷத்திரத் தாதிவாரம்வரிற்றீராதலைச்சலுண்டாம், திங்
களுக்காகில்வெகு சுகபோசனத்தினொடுதிருமாதினருளுமுண்டாம்,
வன்மைதருமங்கார வாரம்வந்தாற்சிறிதும் வாராதுசுகமதென்பார்,
மாசில்பலகலைபயில்வர் மேன்மையாம் புந்தியெனும் வாரத்துடன்கூடி
னால், நன்மைதரு குருவாரமது சேர்ந்துவரிலாடை நன்மையுடனேவ
ந்திடும், நாரியருடன்போக மிகவுமுண்டொருவெள்ளி நல்லவாரத்
தில்வந்தால், அன்மருவு பீடையுண்டாமென்பர் சநியனுக் கமலனே
யருமைமதவேள், அநுதினமு மனதினினை தருசதுரகிரிவளரறப்ப
ளீசுரதேவனே. ௭௭

இதனையுடையவர்க்கு இதுவில்லையெனல்.

பொன்னாசையுள்ளவர்க் குறவேது குருவேது பொங்குபசியுள்
ளபேர்க்குப், போதவேசுசியேது ருசியேது மயல்கொண்டு பொது
மாதர் விழிவலையிலே, எந்நாளுமலைபவர்க கச்சமொடு வெட்கமேதெ
ன்றென்னு முறுகல்விமேல், இச்சையுள பேர்க்கதிக சுகமேது துயி
லேது வெளிதாயிருந்துகொண்டே, பன்னாளுமலைபவர்க் கிகழேது பு
கழேது பாரிலொருவர்க்கதிகமே, பண்ணியிடுமூடருக் கறமேதுமறம
லாற் பகர்கிரையமொன்றுளதுகாண், அன்னுணவருகரி யுரித்தணியு
மெய்யனே யமலனே யருமைமதவேள், அநுதினமுமனதினினை தருச
துரகிரிவரறப்பளீசுரதேவனே. ௭௮

மழைநாட்குறிப்பு.

சித்திரைதிங்கள்பதின் மூன்றுக்குமேனல்ல சிரானபரணிமழையும்
திதில்வைகாசியிற் பூரணைகழித்தபின் சேருநாலாநாளினில், ஒத்துவ
ருமழையுமவ் வாணியிற் றேய்பிறையிலேலங்குமேகாதசியினில், ஒளி
ர்பரிதி விழுபொழுதின் மகதாரமும்மழையு முண்டாயிருந்தாடியில்,
பத்திவரு தேதியைந் தினிலொதிரைரமும் பகருமாபணிமூலநாளப
ரிதியுமறைந்திடக் கனமழைபொழிந்திடப் பாரில்வெகு விளைவுமுண்

டாம், அத்தனை பைங்குவளை மாலையணிமார்பனு மண்ணலேயருமை மதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. எ௯

இருந்துமுதவாமை.

சமயத்திலுதவாத நேயரோன் மிக்கதுயர் சார்பொழுதிலாத கிளையேன், சபைமுகத்துதவாத கல்வியேனொருவரு சமரத்திலாதபடையேன், விமலனுக்குதவாத பூசையேனுறுமிருள் வேளைக்கிலாத சுடரேன், வெம்பசிக்குதவாத வன்னமேனிடுகுளிர்வேளைக்கிலாதகலையேன், தபது தளர்வேளைக்கிலாதவோர் மனைவியேன் சரசத்திலாத நகையேன், சாமரணகாலத்திலுதவாதபுதல்வனேன் றரணிமீதென்பர்கண்டாய், அமரர்க்குமுனிவர்க்கு மொருவர்க்குமெட்டாத வாதியேயருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. அ௰

மறையோர்சிறப்பு.

ஓராறுதொழிலையுங் கைவிடார்சௌசவிதியொன்றுதப்பாதுபுரிவார், உதயாதியிற்சென்றுநீர்படிகுவார்கால மொருமூன்றினுக்குமறவார், தாரந்துகாயத்திரியதுசெபிப்பார்நாளுமதிதிபூசைகள்பண்ணுவார், யாகாதிகருமங்கள் மந்த்ரக்கிரியாலோப மின்றியேசெய்துவருவார், பேராசைகொண்டிடார் வைதிகநன்மார்க்கமே பிழையாதிருக்கு மறையோர், பெய்யெனப்பெய்யுமுகில வர்மகிமையெவர்களும் பேசுதற்கரிதரிதுகாண், ஆரார்நெடுஞ்சடில வமலனேயெனையாளு மண்ணலேயருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. அ௧

அரசர்சிறப்பு.

மநுநீதிமுறைமையும் பரராசர்கொண்டாட வருமதிகாரணவீரமும், வான்விஜயமொடுசரச சாதனவிசேஷமும் வாசிமதகரியேற்றமும், கனமாமமைச்சரும் பலமானதுர்க்கமுங் கைகண்டபோர்ப்படைஞரும் கஜரதபதாதியுந் துரகப்ரவாகமுங் காலதேசங்களைவையும், இனிதாயறிந்தஸ்தானாபதிகளொடுசமர்க் கிளையாத தளகர்த்தரும், என்றும்வற்றாததன தானியசமுத்திரமு மேற்றமுள குடிவர்க்கமும், அனைவோருமெச்சவிங் கிவையெலாமுடையபே ரரசராமருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே.

வைசியர் சிறப்பு.

நீள்கடல்கடந்திடுவர் மலையாளமும்போவர்நெடிதுதூரந்திரிந்து இளைவுதடுமாறார்கள் சலியார்கள்பொருள்தேடி நீணிலத்தரசுபுரியும், வாளுமுழவரைத்தமது கைவசஞ்செய்வார்கள் வருமிடம்வராதவிடமும், மனதையுமறிந்துதவியொன்றுநூறாயிட வளர்ப்பவருதுலைதுலக்கும்,

ஆள்விடுவர் மலிவுதுறை வதுவிசாரித்திடுவ ராவில்பற்பல்சரக்கும், அமைவுறக்கொள்வர்விற் பார்கணக்கதிலெ ணுவு மறவிடார் செலவுவரிலோ ஆளியொத்தேதமலையி னளவுங்கொடுத்திடுவ ரருள்வசிய ரருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௮௩

வேளாளர்சிறப்பு.

யசனாதிகருமமுந் தப்பாமல்வேதிய ரியற்றிநல்லோர்பெறுவதும், இராச்யபாரஞ்செய்து முடிமன்னர் வெற்றிகொண்டென்று நல்லோர் பெறுவதும், வசனாதிதப்பாது தனதானியந்தேடி வசியர்நல்லோர் பெறுவதும், மற்றுமுளபேரெலா மிடியென்றிடாததிக வளமைபெற்றோர் பெறுவதும், திசைதோறுமுள்ளபல தேவாலயம்பூசை செய்யநல்லோர் பெறுவதும், சீர்கொண்ட பைங்குவளை மாலைபுனைவேளாளர் செய்யுமேழிப்பெருமைகாண், அசையாது வெள்ளியலை தனின்மேவிவாழ்கின்றவண்ணமலை யருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௮௪

தானாதிபதிமந்திரி சேனாதிபதிகளினியல்பு.

தன்னரசர் வலுமையும் பரராசரெண்ணமுஞ் சாலமேல்வருகருமமும், தானறிந்ததிபுத்தி யுத்தியுண்டாயினோன் முனாதிபதியாகுவான், மன்னவர்மனத்தையுங் காலதேசத்தையும் வாழ்குடிபடைத்திறமையும், மந்திராலோசனையு மெல்லாமறிந்தவன் வளமானமதிமந்திரி, துன்னியபடைக்குணங் கரிபரிபரிசைகூவே சூழ்படைகவர் புரிசூழ்ச்சியும், தோலாதவெற்றியுந் திடமானசித்தியுள சூரனே சேனாதிபன், அன்னையிலுநல்லமலை மங்கைபங்காளனே யனகனேயருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ()

இராயசகரணீகர்சிறப்பு.

வருமோலையுத்தரத் தெழுதிவருபொருளினல்வர விடுப்போன் மனதையும், மருவிவருகருமமுந் தேசகாலத்தையும் வருகாரதலாமல சுமா, விரைவாயறிந்தரச ரெண்ணிலெண்ணியையள விடவெழுதவாசிக்கவும், வெற்றிகொண்டேபெரியபுத்தியுடையோன்புவியின்மேன்மைராயசகாரனும், கணவாயறிந்துதொகை பிராறுநொடியினிற் கூடிதேற்றிடக்குறைக்கக், கடுகையொரு மலையாக்க மலையையொருகடுகுமாக்காட்டுவோன்கருணீகனும், அருவாகியுருவாகி யொளியாகிவெளியாகுமண்ணலேயருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௮௬

கோபத்தின் கொடுமை.

கோபமேபாவங்களுக்கெலாந் தாய்தந்தைகோபமே குடிகெடுக்கும், கோபமேபொன்றையுங் கூடவரவொட்டாதுகோபமேதுயர்கொ

டுக்கும், கோபமேபொல்லாது கோபமேசீர்கேடு கோபமேயுறவறுக்கு
ம், கோபமேபதிசெயுங் கோபமேபகையாளி கோபமேகருணைபோக்
கும், கோபமேயீனமாங் கோபமேயனைவருங்கூடாமலொருவனுக்கும்
சோபமேமறலிமுன் கொண்டுபோய்த்தீயநரகத்துழியினிற்றள்ளுமால்
ஆபத்தெலாந்தவிர்த்தென்னை யாட்கொண்டருளுமண்ணாமலையருமை
மதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதே
வனே. அஎ

பல்துறை.

தான்புரிதவத்தையுங் கொடையையும் புகழுவோர் தங்களுக்க
வைதழிவுறு, சற்றுமறிவில்லாமலந்தணரைநிந்தனைசெய்தயலிலோ
ராயுள்பெறுகார், மென்படுநறுங்கலவை மாலைதயிர்பால்புலால்விடுநற்
செங்நெலிவைகள், வெருருவர்தந்திடினு மருமொழியறிந்தபேர்விலை
கொடுத்தேகொள்ளுவார், தேன்கனிகிழங்குவிறகிலையிவையனைத்தை
யுந் தீண்டரியநீசரெனினும், சீர்பெறவளிப்பரேனிகழாதுகைக்கொள்
வர் சீலமுடையோரென்பரால், ஆண்கொடியுயர்த்தவுமைநேசனேயீ
சனே யண்ணாமலையருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசது
ரகிரிவள ரறப்பளீசுரதேவனே. அஅ

தத்துவத்திரயம்.

பூதமோரைந்துடன் புலனைந்துஞானம் பொருந்துமிந்திரியமை
ந்து, பொருவில்கன்மேந்திரிய மைந்துமன மாதியாம்புகலரியகரணநா
ன்கே, ஓதினானிவையாத்ம தத்துவமெனச்சொல்வருயர்காலநியதிக
லையோ, டோங்கிவருவித்தைராகம்புருடன்மாயையென் றுரைசெய்யு
மோரேழுமே, தீதில்வித்யாதத்துவ மென்றிடுவரிவையலாற்றிகழ்சுத்
தவித்தையீசன், சீர்கொள்சாதாக்கியஞ் சத்திசிவமைந்துமே சிவத
த்வமென்றுரைகுவார், ஆதிவடநீழலிற்சனகாதியர்க்கருள்செய்யண்மலே
யருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீ
சுரதேவனே. அகூ

மன்மதபாணமும் அவற்றின்குணமுதலியவும்.

வனசஞ்சூதமுடன சோகந்தவளமலர்நீல மிவையைந்துமேமா
ரவேள்கணைகளாமிவைசெயுங் குணமுளரிமனதிலாசையையெழுப்பு
ம்வினவிலொண்சூதமலர்மெய்பசலையுண்டாக்குமிகவசோகந்துயர்செயு
ம், வீழ்ந்திடுங்குளிர்முல்லைநீலமுயிர் போக்கிவிடுமேவுமிவைசெயுமவ
த்தை, நினைவிலதுவேநோக்கம்வேறொன்றிலாசையறநெட்டுயிர்ப்பொ
டுபிதற்றல் நெஞ்சந்திடுக்கிடுதலனம்வெறுத்திடல்காய்ச்சனோர் தன்
மௌனமபுரிகுதல் அனையவுயிருண்டில்லை யென்னலீரைந்துமாபத்த
னேயருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறா
பளீசுரதேவனே. கூ௰

மன்மதனுபகரணங்கள்.

வென்றிலைசெழுங்கழைவிஞாணிகருவண்டினமேல் விடுங்கணைகளலராம், வீசிடுந்தென்றல்தேர் பைங்கிள்ளையேபரிகள் வேழங்கெடாதவிருளாம், வஞ்சியர்பெருஞ்சேனைகைதையுடைவாணெடிய வண்மைபெறுகடன்முரசமாம், மகரப்பதாகைவருசேவிலங்காகளம்மணமேபெரும்போர்க்களம் சஞ்சரிகைவிசைபாடல்குமுதநேயன் சவிகைசாரதி இமயமனிலியாம் தறுகண்மடமாதரிளமுலைமகுடமாயல் குறவருதிருக்குமிடமாம், அஞ்சுகணைமாரவேட்கென்பரொளியோர்க்கெலாயமுதேயருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௯௧

பகைகொளத்தகாதவர்.

மன்னவரமைச்சர்துர்ச்சனர் தூதரொடுமாறுதமர் மர்மமுடையோர், வலுவர்தாணீசர்மிக்குபாகஞ்செய்தன்னமிடுமடையர் மந்திரவாதியர், சொன்னமுடையோர்புலையருபதேசமதுசெய்வோர்சூழ்வயித்தியர் கவிதைகள், சொற்றிடும் புலவரிலர் பதினைந்துபேரொருசொற்பனந்தனிலாகிலும், நன்னெறியறிந்தபேர் பகைசெய்திடார்களிந் நானிலத்தென்பர்கண்டாய், நாரியோர்பாகனே வேதாகமம்பரவு நம்பனேயன்பர்நிதியே, அன்னமூர்பிரமனுங் கண்ணனுங்காணுதலண்ணலேயருமைமதவேள், அனுதினமு மனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௯௨

இதாகிதஞ்செய்து பயன்கொள்வன.

சுவைசேர்கரும்பைவெண் பாலைப்பருத்தியைச்சொல்லுநன்னெல்லையெள்ளைத், தூயதெங்கின்கனியையெண்ணுதத்துட்டரைத் தொண்டரைத் தொழுதொழும்பை, நவைதீருமாறுகண் டித்தேபயன் கொள்வர் நற்றமிழ்க் கவிவாணரைப், நலமிக்கசெழுமலரை யோவியமெனத்தக்க நயமுள்ள நாரியர்தமைப், புவிமீதுபகார நெஞ்சுரைச் சிறுவரைப் போர்வீரரைத் தாயரைப், போதவும்பரிவோடிதஞ்செய்யமிதபயன்புகழ்பெறக்கொள்வர்கண்டாய், அவமிதவிர்த்தென்னையாட்கொண்டவள்ளலே யண்ணலேயருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௯௩

தருமம்.

பெறுமில்பெறுவித்தலொடு நாளோலைநாடோறும் பிள்ளைகளருந்திடும்பால், பேசரியசத்திர மடமாவுரிஞ்சுகல் பெண்போக நாவிதன் வண்ணான், மறைமொழிகணாடி தண்ணீர்தலைக்கெண்ணைபசு வாயினுறை பிணமடக்கல், வாவியிறுமுயிர்மீட்ட லின்பொருளடைக்காய்வழங்கல் சுண்ணாம்புதவுதல், சிறைபுகுபவர்க்கமுது வெற்றிலைகாத்தல்பொழில்செய்தல் முன்னூலின்மணங், இழ்விலங்கூண்பிச்சை யறுசமயருக்குண்டி தேவராலயமவுஷதம், அறைதல்கற்போர்க்கன்ன நாலெட்டற

ங்களுமு னன்னைசெயலருமைமதவேள், அனுதினமுமனதினினைதரு சதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. கூச

இல்லறம்.

தந்தைதாய்சற்குருவை யிட்டதெய்வங்களைச் சன்மார்க்கமுளமனைவியைத், தவறாதசுற்றத்தை யேவாதமக்களைத் தனைநம்பிவருவோர்களைச்,சிந்தைமகிழ்வெய்தவேபணிவிடைசெய்வோர்களைத்தென்புலத்தோர்வறிஞரைத், திதிலாவதிதியைப் பரிவுடைய துணைவரைத்தேனுவைப் பூசுரர்தமைச்,சந்ததஞ்செய்கடனை யொன்றுமிவைபிழையாது தான்புரிந்திடலில்லறம், சாருநல முடையராந் துறவறத்தோருமிவர் தம்முடன்சரியாயிடார், அந்தரியுயிர்க்கெலாந் தாய்தனினுநல்லவட்கன்பனே யருமைமதவேள், அனுதினமுமனதினினைதரு சதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. கூரு

புராணம்.

தலைமைசேர்பௌடிக மிலிங்கமார்க்கண்டமெழில் சாரும்வாமனமச்சமே, சைவம்பெறுங்கூர்மம் வரும்வராகங்காந்தசரிதமேபிரமாண்டமும், நிலைமைசேரிப்பத்துமுயர்ச்சிவபுராணமா நெடியமால் கதைவைணவம், நீதிசேர்காருட நாரதம்பாகவத நீடியபுராணநான்காம், கலைவலர்சொல்பதுமமொடு பிரமகைவத்தமே கமலாலயன்காதையாம், கதிரவன்காதையே சூரியபுராணமாங் கனல்காதையாக்கினேயம், அலைகொண்டநதியும்வெண் மதியுமறுகும்புனையு மத்தனேயருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே.

புகழ்ச்சி.

பருகாதவமுதொருவர் பண்ணாதபூஷணம் பாரின்மறையாதநிதியம், பரிதிகண்டலராத நிலவுகண்டுலராத பண்புடையபங்கேருகம், கருகாதபுயல்கலைக ளருகாததிங்கள்வெங் கானிலுறையாதசீயம், கருதரியவிக்குணமனைத்து முண்டானபேர் காசினியிலருமையாகும், தெரியவுரை செய்யின்மொழிகீர்த்திவருகல்வியோடு சிரிதயவீகைவதனம், திடமானவீரமிவை யென்றறிகுவார்களிச் செகமெலாங்கொண்டாடவே, அருளகற்பதருவென்ன வோங்கிடுந்தானதுரை யாகுமேமதருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. கூஎ

திருமாலவதாரம்.

சோமுகாசுரனைமுன்வதைத்தமரர்துயர்கெடச் சுருதிதந்ததுமச்சமாம, சுரர்தமக்கமுதீந்த தாமையாம்பாய்போற்சுருட்டிபாநிலமெடுத்தே,போமிரணியாக்கதனை யுயிருண்டதேனமாம் பொல்லாதகனகனுயிரைப், போக்கியதுநரசிங்கமுலகளந் தோங்கியதுபுனிதவாமனமூர்த்தியாம், ஏமுறுமிராவணனை வென்றனிராவகனிரவிகுலம் வேராறுத்தோன், எர்பரசிராமன்வரு கண்ணனொடுபலராமனிப்புவிபயந்த

விர்த்தோர், ஆமினியகற்கியினி மேல்வருவதிவைபத்து மரிவடிவமரு
மைமதவேள், அனுதினமுமனதினிலே தருசதுரகிரிவளரறப்பளீசுர
தேவனே. ௯௮

சிவமூர்த்தி.

பிறைசூடியுமைநேசன்விடையூர்திநடமிடும்பெரியனுயர்வதுவை
வடிவன், பிச்சாடனன்காமதகனன்மறலியைவென்ற பெம்மான்புறந்
தகித்தோன், மறமலிசலந்தரனைமாய்த்தவன்பிரமன்முடிவௌவினோ
ன்வீரேசுரன், மருவுநரசிங்கத்தை வென்றவரனுமைபாகன்வனசரன்
கங்காளனே, விறன்மேவுசண்டேச ரட்சகன்கமோந்திமிக்கசக்கரமுத
வினோன், விநாயகற் கருள்செய்தோன் குகனுமையுடன்கூடி மிளிரே
கபாதன்சுகன், அறிவரியதக்ஷிணா மூர்த்தியொடிலிங்கமாமையனேய
ருமைமதவேள், அநுதினமுமனதினிலே தருசதுரகிரிவளரறப்பளீ
சுரதேவனே. ௯௯

கவிவணக்கம்.

மலரிதழிபைங்குவளை மென்முல்லை மல்லிகை மருக்கொழுந்துய
ர்கூவிளம், மற்றுமுளவாசமலர் பத்திரஞ்சிலசூடிமணிமுடிதனிற்பொ
றுததே, சிலரெருக்கொடுவனத்துப்பூளை பச்சறுகு செம்முளரிமலர்
சூடவே, சித்தம்வைத்திடவுமங் கீகரித்திடுமகா தேவதேவா தெரிந்
தே, கலைவலருரைக்குநன் கவியொடம்பலவாண கவிராயனாதுமென்பு
ன், கவியையுஞ்சூடியே மனமகிழ்ந்திடுவதுன் கடனாகுமடனாகமும்,
அலைபெருகுகங்கையுஞ் செழுமதியமும்புனையு மமலனேயருமைமத
வேள், அநுதினமுமனதினிலே தருசதுரகிரிவளரறப்பளீசுரதே
வனே. ௱

அறப்பளீசுரசதகம்.

முற்றிற்று.

மெய்கண்டதேசிகன் திருவடிவாழ்க.